# யாழ்ப்பாணக் கல்வி வலயம்

## முதலாம் தவணைப் பரீட்சை - 2016

### செயன்முறைத் தொழினுட்பத் திறன்கள்

2261

தரம்: 06

சுட்டெண் :......................................

நேரம்: 1.30 மணித்தியாலம்

### பகுதி - I

❖ **மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கீறிடுக.**

01) வீட்டுத் தோட்டத்தில் தாவரங்களை வளர்ப்பதனால் கிடைக்கக் கூடிய நன்மையாக அமைவது.

1) அழகான சூழலை உருவாக்கலாம் 2) பணத்தை மீதப்படுத்தலாம்

3) சுத்தமான வளியைப் பெறலாம் 4) மேற்கூறிய யாவும்சரி

02) பின்வருவனவற்றுள் சுவையூட்டியாகப் பயன்படுவது.

1) பாவட்டை, கற்றாளை 2) கங்குன், அகத்தி

3) இஞ்சி, மிளகு 4) சோம்பு, பாற்கிழங்கு

03) வித்துக்களை நாற்றுமேடையில் இட்டு பின் நாற்றுக்களாக நடக்கூடிய பயிருக்கு உதாரணமாக அமைவது

1) பயற்றை 2) கத்தரி 3) வெண்டி 4) முள்ளங்கி

04) விறகுச் சாம்பல் கலந்து இளம் வெயிலில் காயவிட்டு ஆரம்பச்சிகிச்சை செய்து நடப்படும் வித்துக்கு உதாரணமாக அமைவது.

1) வெண்டி 2) தக்காளி 3) பயற்றை 4) கத்தரி

05) பின்வருவனவற்றுள் மின்பற்றாசுக்கோலின் பயன்பாடாகக் கருதப்படுவது.

1) பலகையைத் துளையிடல்

2) உலோகங்களை அராவுதல்

3) மெல்லிய உலோக ஒட்டு வேலைகளுக்கும் பயன்படும்

4) உலோகங்களை வெட்டல்

06) பின்வருவனவற்றுள் உயிரற்ற மூடுபடையாகக் கருதப்படுவது.

1) மரத்தூசி 2) வைக்கோல் 3) தென்னந்தும்பு 4) மேற்கூறிய யாவும்

07) வெளிவிடும் நாற்றம் காரணமாக பூச்சிகளை விரட்டும் தாவரமாகக் கருதக்கூடியது.

1) புதினா 2) கரட் 3) கொத்தமல்லி 4) இஞ்சி

08) நோய்ப் பீடைகளைக் கட்டுப்படுத்த தலைகீழாக V வடிவத்தில் பந்தல் அமைக்கப்படுவது.

1) பொறிமுறை ஆகும் 2) கரைசல்களை பாவித்தல்முறை ஆகும்

3) புகையூட்டல்முறை ஆகும் 4) இரசாயனமுறை ஆகும்

09) அரிசியைக் களஞ்சியப்படுத்தும்போது தேசிக்காய் இலை அல்லது வேப்பிலை இட்டு வைப்பதன் நோக்கம்

1) எலிகளிலிருந்து பாதுகாத்தல் 2) நோய்த்தொற்றிலிருந்து பாதுகாத்தல்

3) நிள்மூஞ்சு வண்டிலிருந்து பாதுகாத்தல் 4) உயர்வெப்பநிலையை குறைப்பதற்கு



kalvi.lk

10) பின்வருவனவற்றுள் புதிய உணவுகளின் தரப்பண்பாக அமையாதது எது?

1) போசணைத் தரம் பாதுகாக்கப்பட்டிருத்தல் 2) உரிய மணம் இருத்தல்

3) சுகாதாரப் பாதுகாப்பற்றதாக இருத்தல் 4) இயற்கை நிறம் பாதுகாக்கப்பட்டிருத்தல்

11) கிழங்கு, வெங்காயம் போன்றவற்றை களஞ்சியப்படுத்த உகந்த இடம்

1) காற்றோட்டமுள்ள உலர்வான இடம் 2) காற்றோட்டமற்ற உலர்வான இடம்

3) காற்றோட்டமுள்ள ஈரமான இடம் 4) காற்றோட்டமற்ற ஈரமான இடம்

12) நிறையுணவு கொண்ட ஒரு உணவுவேளைக்கு நாம் பெற்றுக்கொள்ள வேண்டிய உணவுத்தொகுதிகளின் அளவைக் காட்டுவது.

1) உணவு நுகர்வு 2) உணவின் இயல்பு

3) உணவுக் கூம்பகம் 4) உணவின் தரப்பண்பு

13) தகரப்பேணியில் அடைக்கப்பட்ட உணவை கொள்வனவு செய்யும்போது கவனிக்க வேண்டிய விடயங்கள்

1) தகரப்பேணி கறைபிடிக்காதிருத்தல்

2) தகரப்பேணி வீங்கிய நிலையில் காணப்படாதிருத்தல்

3) துளைகள் இல்லாத பேணியாக இருத்தல்.

4) மேற்கூறிய யாவும்

14) P.V.C. நீர்க்குழாய்களில் காணப்பட வேண்டிய பண்பாக கருதக் கூடியது.

1) வெப்பத்தை வைத்திருத்தல் 2) மின் கடத்தும் திறன்

3) வளையும் தன்மை 4) தாங்கும் திறன் அற்ற தன்மை

15) உலோகங்களை அராவுவதற்குப் பயன்படுவது.

1) அரம் 2) சீவுளி

3) உலோகமரியும் வாள் 4) வெட்டும் உளி

16) கருத்தொன்றை தெரிவிக்கப் பயன்படுபவை.

1) குறியீடு 2) இலச்சினை 3) தளவுரு 4) முறைசாரா வடிவம்

17) தேவைகள் தொடர்பான பிழையான கூற்று.

1) தேவைகள் அனைவருக்கும் பொதுவானவை

2) தேவைகள் வரையறுக்கப் பட்டவை.

3) தேவைகள் ஆளுக்காள் வேறுபடும்

4) உயிர் வாழ்வதற்கு வரையறுக்கப்பட்ட தேவைகள் அவசியமாவை

18) பின்வருவனவற்றுள் சேவையாக கருத முடியாதது.

1) ஆசிரிய சேவை 2) தாதிச்சேவை

3) தூரிகை 4) போக்குவரத்துச் சேவை

19) அரச வைத்தியசாலைகள் எனப்படுபவை.

1) இலாபநோக்குடைய நிறுவனங்கள்

2) இலாப நோக்கற்ற நிறுவனங்கள்

3) இலாப நோக்கமும் நோக்கமும் கலந்த நிறுவனங்களாகும்

4) மேற்கூறிய நிறுவனங்களில் எதுவுமில்லை

20) 'Paint' மென்பொருளில் 'பட்டியற் பட்டை' என்பதற்கான சரியான ஆங்கிலப்பதமாக அமைவது.

1) Title bar 2) Toolbar 3) Shape bar 4) Menu bar

(20x1=20புள்ளிகள்)

## பகுதி - II

❖ **முதலாம் வினா கட்டாயமானது. ஏனைய இரண்டு வினாக்களைத் தெரிவு செய்து மொத்தமாக மூன்று வினாக்களிற்கு விடை தருக.**

(01) நீர் பாடசாலையில் அமைத்த சட்டகத்துடன் கூடிய உயர்பாத்தி தொடர்பாக பின்வரும் வினாக்களிற்கு விடை தருக.

1. சட்டகத்துடன் கூடிய உயர்பாத்தி அமைக்கத் தேவையான பொருட்களைப் பட்டியற் படுத்துக.
2. பாத்தியின் நீள அகலங்களை எழுதுக.
3. சட்டகத்துடன் கூடிய உயர்பாத்தியில் பயிரிடக்கூடிய பயிர்கள் 2 தருக.
4. சட்டகத்துடன் கூடிய உயர்பாத்தியினை அமைக்கும் முறையைச் சுருக்கமாக விளக்குக.
5. பாத்தியினால் கிடைத்த நன்மைகள் இரண்டினைக் குறிப்பிடுக.

(2x5=10புள்ளிகள்)

(02)
1. நேரடியாக பாத்தியில் நடக்கூடிய வித்துக்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
2. தாவரப் பாகங்களை இடித்துச் சாறு பிழிந்து நோய் பீடை நாசினிகளாகப் பயன் படத்தக்க தாவரங்களையும் அவற்றின் பாகங்கள் இரண்டினையும் குறிப்பிடுக.
3. பொருளொன்றைக் கொள்வனவு செய்யும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
4. பயிர்களின் நட்புப் பிராணிகளில் பூச்சிகளை உண்ணும் பிராணிகளிற்கு இரு உதாரணங்களைத் தருக.
5. உயிருள்ள மூடுபடையாக பயன்படுத்தத் தக்க தாவரங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

(2x5=10புள்ளிகள்)

(03)
1. சந்தையில் உணவுகளைக் களஞ்சியப்படுத்தும் போது கவனிக்கவேண்டிய விடயங்கள் இரண்டு தருக.
2. தயாரிக்கப்பட்ட உணவுகள் இரண்டினைக் குறிப்பிடுக.
3. சுட்டுத்துண்டில் காணப்படவேண்டிய விடயங்கள் இரண்டினைத் தருக.
4. புதிய மீனின் இயல்பு ஒன்றினையும் பழுதடைந்த மீனின் இயல்பு ஒன்றினையும் குறிப்பிடுக.
5. இலாப நோக்குடைய நிறுவனங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

(2x5=10புள்ளிகள்)

(04)
1. உமது குடும்பத்திற்கு அவசியமான சேவைகள் இரண்டினைக் குறிப்பிடுக.
2. பின்வரும் உபகரணங்களின் பயன்பாடு ஒவ்வொன்று வீதம் எழுதுக.
   (அ) கவர்ச்சுத்தியல்
   (ஆ) இடுக்கி
3. உணவுகளைப் பொதியிடப் பயன்படும் பொருட்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
4. வேலை செய்யும் நபரின் பாதுகாப்புக்காக பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் இரண்டினைக் குறிப்பிடுக.
5. முறைசார் வடிவங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

(2x5=10புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

Education கல்வி අධ්‍යාපන

kalvi.lk


தரம் 01 - 10
3ம் தவணை
REVISION | PAPER DISCUSSION
ஆரம்பம் - 01.12.2024
மீட்டல் மற்றும் வினாத்தாள் கலந்துரையாடல் வகுப்புகள்
இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் இணைந்து கொள்ள முடியும்.
JOIN NOW
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன..
கட்டண விபரங்கள்
தமிழ் Medium
தரம் 01-02 2000/=
தரம் 03-05 2500/=
தரம் 06-10 3000/=
English Medium
தரம் 06-07 3500/=
Education கல்வி අධ්‍යාපන
KALVI.LK
WHATSAPP
075 287 1457